# பல்நோக்குப் பார்வையில் முருகத் தத்துவம்

# FALSAFAH MURUGAN BICARA PELBAGAI PERSPEKTIF

Ketua Editor M.Rajantheran

JABATAN PENGAJIAN INDIA
UNIVERSITI MALAYA

# பல்நோக்குப் பார்வையில் முருகத் தத்துவம்

ISBN 978-967-11351-0-5

தொகுப்பாசிரியர் : மு. இராசேந்திரன்

வெளியீடு :
இந்திய ஆய்வியல் துறை,
மலாயாப் பல்கலைக்கழகம்.

© இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம்.

இந்த நூல் வெளியீட்டாரின் பதிப்புரிமைக்குட்பட்டது. இந்த நூலையோ அல்லது அதன் எந்த ஒரு பகுதியையோ வெளியீட்டார்களின் அனுமதி இல்லாமல் எந்த ஊடகத்திலும் எவ்வகையிலும் மறுபதிப்பு செய்தல் அல்லது படியெடுத்தல் கூடாது.

மலேசியாவில் அச்சிடப்பட்டது
அச்சகம் : கிரினோகிராபிக்ஸ் செண்ட். பெர்ட்.

# Falsafah Murugan Bicara Pelbagai Perspektif

Ketua Editor : M. Rajantheran

Penerbit :
Jabatan Pengajian India,
Fakulti Sastera dan Sains Sosial,
Universiti Malaya,
50603 Kuala Lumpur.

© Jabatan Pengajian India, Universiti Malaya.

Semua Hak Cipta buku ini terpelihara. Mana-mana bahagian dalam buku ini tidak boleh dicetak dalam apa jua bentuk media, tanpa kebenaran penerbit.

Dicetak di Malaysia
Dicetak Oleh : Crinographics Sdn Bhd

S.Muhunthan BA(Hons)MA,Mphil

samju25@yahoo.com

# “கந்தபுராணத்தில் அத்வைத வேதாந்தம் -ஓர் சமூக பண்பாட்டு நோக்கு”

**ஆய்வின் நோக்கம் :**

கச்சியப்ப சிவச்சாரியார் தனது சைவ சித்தாந்தச் சார்புடைய பேரிலக்கியமான கந்தபுராணத்தில் கட்டமைத்துள்ள தத்துவப்போராட்டமானது அத்வைத வேதாந்தத்தை தோற்கடிப்பதனையே நோக்கமாகக் கொண்டதாகும். இதற்கான காரணங்களை அரசியல் சமூக பண்பாட்டு இயங்குவிசைகளுடன் தொடர்புபடுத்திக் கண்டறிய முயல்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

**உபநோக்கங்கள் :**

- விஜயநகர மன்னர் காலத்தில் முருகவழிபாட்டில் ஏற்பட்ட புத்தெழுச்சிக்கான பொதுவான காரணமாக முகலாயர் வருகையே ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனை கந்த புராணத்தின் எழுச்சிக்கான காரணமாகக் கூறுவது பொருத்தமற்றது என்பதனை எடுத்துரைத்தல்.

- அரசியல் சமூக பண்பாட்டு இயங்குவிசைகளுக்கும், தத்துவக் கோட்பாடுகளுக்கும் இடையிலான பரிவர்த்தனை முறைகளை கந்தபுராணம் எழுச்சிபெற்ற வரலாற்றுக் காலகட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்க முற்படுதல்.

- கச்சியப்பர் கருத்தியல் ரீதியாக அத்வைதத்தை தோற்கடிப்பதற்காக கந்த புராணத்தில் வகுத்துக்கொண்டுள்ள உத்திகளை மெய்யியல் நோக்கில் வெளிக்கொணர்தல்.

**ஆய்வுப்பரப்பும் எல்லையும் :**

கச்சியப்பசிவாச்சாரியரால் பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து பாடல்களில் ஆறு காண்டங்களாக வகுத்துப்பாடப்பட்ட கந்தபுராணமே இதன் ஆய்வுப்பரப்பாகும்.

கந்தபுராணம் தோற்றம் பெற்ற காலமாக அண்மைக்கால ஆய்வாளர்கள் பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கி.பி. 14 -15 நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலகட்டமே இவ்வாய்வின் கால எல்லையாக வகுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முன்னோடிகள் :**

கந்தபுராணப் பொருள்மரபு, இலக்கிய வடிவம், முருகவியல், சைவசித்தாந்தம் மற்றும் தமிழ்பண்பாட்டியல் சார்ந்துஆய்வுகளும் ஒப்பாய்வுகளும் வெளிவந்துள்ளன.அவற்றுள் காசிவாசி செந்திநாதையரின் கந்தபுராண நவநீதம், ரா.பி.சேதுப்பிள்ளையின் வேலும் வில்லும், ந.இராமலிங்கத்தின் கந்தபுராண ஆராய்ச்சி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் கந்தபுராண கலாசாரம், பேராசிரியர் நா.சுப்பிரமணியனின் கந்தபுராணம் ஒரு சமய பண்பாட்டுக் களஞ்சியம் போன்றவை குறிப்பிடத்தக்கன. இவற்றுள் கந்தபுராணம் ஒரு சமய பண்பாட்டுக் களஞ்சியம் என்ற நூல் மட்டுமே இந்த ஆய்வின் பொருள்மரபுடன் தொடர்புடையதாகும். எவ்வாறாயினும் அந்நூலில்

எடுத்தாளப்பட்டுள்ள அத்வைதம் சார்ந்த கருத்தமைவுகளுடன் இந்த ஆய்வு கருத்துநிலை முரண்பாடுகளைக் கொண்டுள்ளது.

**ஆய்வு முறையியல் :**

பெரும்பாலும் விவரண முறையியலே இவ்வாய்வில் கைக்கொள்ளப்படுகின்றது. பொருத்தமான இடங்களில் வரலாற்றியல் ஆய்வுஅணுகுமுறையும் ஒப்பாய்வுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளன.அவசியமான சந்தர்ப்பங்களில் தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுத்தப்படுகின்றன.

**அறிமுகம்:**

விஜயநகரப்பேரரசு காலத்தில் முருகவழிபாட்டின் புத்தெழுச்சிக்கும் கந்தபுராணம் ஒரு பேரிலக்கியமாகக் கட்டுருவானமைக்குமான பிரதான காரணியாக இஸ்லாமியப் படையெடுப்பையே அனேக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டிவந்துள்ளனர்.ஆனால் கந்தபுராணத்தின் எழுச்சியைப் பொறுத்தவரையில் இந்த எடுகோள் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. இதற்கான நியாயங்களைப் பின்வருமாறு பட்டியலிட முடியும்.

1) சூரபத்மன் மிகச்சிறந்த சிவபக்தன் - சைவன்- சிவனிடமிருந்து வரம்பெற்றவன். அவனுடைய சகோதரரும் அத்தகையோரே.

2) சூரனிற்குக் கிடைத்த வரமும் பேறுகளும் வலிமையும் சிவத்தினால் தரப்பட்டதேயன்றிப் பிறிதொரு தெய்வத்தினாலன்று.

3) சூரபத்மனாதியோர் காசிபரிஷியின் புதல்வர்கள், எனவே தந்தைவழியுரிமையில் இவர்கள் தேவர்களையும் விஞ்சிய சமயசீலர்கள்.

4) தாயாகிய மாயையும் அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியாருமே சூரபத்மனாதியோர் வழிதவறுவதற்குக் காரணமாயிருந்தனர். அவர்கள் அசுரர்களேயாயினும் புறச்சமயத்தவர்கள் அன்று.

5) சைவம் அரசுமதமாகக் கொலுவீற்றிருந்த சோழப்பெருமன்னர் காலத்தில் வைணவ சமூகத்தின் ஏக்கத்தையும் எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்தும் வகையிலே கம்பரின் இராமாயணம் எழுச்சிபெற்றது என்கிற விவாதம் பொருத்தமுடையதே. ஆனால் இதே சூத்திரத்தை கந்தபுராணம் எழுச்சிபெற்ற சூழ்நிலையில் இஸ்லாமியருடன் வாய்ப்புப் பார்ப்பது பொருத்தமற்றதாகவே தோன்றுகின்றது. ஏனெனில் இராவணனைப் போலச் சோழப்பெருமன்னர்களும் சிவநேசச்செல்வர்கள். கம்பரோ வைஷ்ணவர். ஆனால் கந்தபுராணத்திலோ சூரபத்மனைப் போலக் கச்சியப்பரும் சிறந்த சிவபக்தராயிற்றே??

எனவே அடிப்படையில் கந்தபுராணத்தின் கதையோட்டத்துடன் உள்ளார்த்தமாக தான் வாழ்ந்த காலத்தில் **சைவத்துள் நடைபெற்ற சில தத்துவார்த்தப் போராட்டங்களையே** கச்சியப்பசிவாச்சாரியார் பதிவு செய்துள்ளார் எனக்கருதவேண்டியுள்ளது. தத்துவக் கோட்பாடுகள் பல இருந்த போதிலும் காலத்துக்குக் காலம் குறித்த சில தத்துவக்கோட்பாடுகள் எழுச்சிபெறுவதற்கு அக்கால கட்டத்தில் நிலவிய அரசியல் சமூக இயங்குவிசைகளின் தாக்கத்தினால் உந்தப்பட்ட சமூக மனநிலையே காரணமாக அமைகின்றது.

எனவே கந்தபுராாணத்தில் இழையோடியுள்ள தத்துவார்த்தப் போராட்டங்களை உணர்ந்து கொள்வதற்கு அவ்விலக்கியம் எழுச்சிபெற்ற விஜயநகரப் பெருமன்னர் காலத்தின் போக்குகளைப் பற்றி அறிய வேண்டியது இன்றியமையாததாகும்.

**விஜயநகரப் பேரரசின் எழுச்சி:**

விஜய நகரப் பேரரசு கி.பி. 1336இல் (14ம் நூற்றாண்டு) கிருஷ்ணா – துங்கபத்திரை ஆற்றிற்குத் தெற்கே வித்தியாரண்யர், சாயனாச்சாரியார், மாதவாச்சாரியார் ஆகிய இந்து சமய ஞானிகளின் ஆசீர்வாதத்துடன் சங்கம எனும் சிற்றரசனின் புதல்வர்களாகிய ஹரிகரன் - புக்கன் சகோதரர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்துப்பண்பாட்டைப் பாதுகாப்பதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு கர்னாடகாவில் நிறுவப்பட்ட இவ்வரசானது காலப்போக்கில் கேரளம், தமிழகம், ஆந்திராவின் சில பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பேரரசாகப் பரிணமித்தது. மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தென்னிந்தியாவில் இஸ்லாமியராதிக்கத்தைத் தடுத்து நிறுத்திய பெருமை இவ்வரசுக்கே உரித்துடையதாகும்.

இந்துப் பண்பாட்டின் பல்வேறு அம்சங்களும் இக்காலகட்டத்தில் பெருவளர்ச்சியுற்றன. குறிப்பாக இந்துதத்துவத்துறையைப் பொறுத்தவரை "தத்துவஎழுச்சிக்காலம்" எனப் போற்றப்படுமளவிற்கு இந்து தத்துவத்தின் பல பிரிவுகளும் புத்தெழுச்சி பெறத்தொடங்கின. இத்துறை சார்ந்த பழைய மூலநூல்களுக்கு விளக்கவுரைகள் தோன்றின. தத்துவ விவாதங்கள் நிகழ்ந்தன.

சோழப் பேரரசர் காலத்தில் தனிப்பெருந் தத்துவமாகக் கோலோச்சிய சைவசித்தாந்தம் தனது இருப்பினை நிலைநாட்டுவதற்காக இக்காலத்தில் அத்வைதம், வீரசைவம், சிவாத்துவிதம், தாந்திரீகம், விசிட்டாத்வைதம், துவைதம் போன்றவற்றுடன் போராடவேண்டியிருந்தது. குறிப்பாக வீரசைவமும் ஸ்மார்த்தசைவமும் சமூகத்தில் மிகப்பெரியளவில் செல்வாக்குப் பெற்றன.

ஸ்மார்த்தசைவம் என்பது சிவன் உட்பட அம்மன், கணபதி, முருகன் போன்ற தெய்வங்களைப் பேதமின்றி வழிபடுகின்ற மக்கள் சமயப்பிரிவாகும். இவர்களின் மெய்யியற் கொள்கை அத்வைதமாக இருந்தது. அத்வைதம் கூறுகின்ற பிரம்மத்தை சிவனாக வருவித்துக் கொண்ட முறைமை இவர்களிடம் காணப்பட்டது. விஜயநகர காலத்தில் பெரும்பான்மையான மக்கள் ஸ்மார்த்தசைவத்தைப் பின்பற்றுவதிலேயே ஈடுபாடு கொண்டிருந்தனர்.

(இராசசேகரன்,இரா,2006,சைவப்பெருவெளியில் காலம்,ப.87.)

கன்னடதேசத்திலிருந்து விஜயநகர மன்னர்களின் ஆதரவுடன் தமிழகத்தில் பரவிய வீரசைவமும் ஆக்கிரோஷமான சமய அபிமானத்தைப் போதித்ததுடன் வேதங்களின் மேலாண்மையை நிராகரித்து சாதி, ஆசார வேறுபாடுகளை மறுதலிக்கின்ற சீர்திருத்த இயக்கமாக எழுச்சிபெற்றது. பல சந்தர்ப்பங்களில் வீரசைவர்கள் அத்வைதப் பனுவல்களிற்கு ஆசிரியர்களாகவும் இருந்துள்ளமையிலிருந்து இவையிரண்டும் காலத்தின் தேவையினைக் கருத்திற்கொண்டு தம்மிடையே கைகோர்த்துக்கொண்டமை புலனாகிறது.

அத்வைதம் ஒவ்வோர் ஆன்மாவையும் பிரம்மமாகவே கருதுகின்றது. யதார்த்த உலக வாழ்வில் காணப்படுகின்ற சமூக ஏற்ற தாழ்வுகள் யாவும் மாயையால் விளைந்தவையேயன்றி அவை நித்தியமானவையன்று என்கிறது. உலகில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளுக்கு கன்மக் கொள்கையின் வழியே அந்தந்த ஆன்மாக்களே பொறுப்பாகின்றன என்கிற விவாதத்தை தனது கனவுலகவாதத்தில் வைத்து அத்வைதம் நிராகரிக்கிறது. புலையனும், புரோகிதனும் அரசனும் ஆண்டியும், மனிதனும் நாயும் எனப் பிரபஞ்சத்திலுள்ள எந்த ஒரு ஜீவராசியும் அடிப்படையில் ஏகான்மாவாகிய பரப்பிரம்மமே என்கிற ஒருமைக் கொள்கையை தனது அவச்சேதவாதத்தின் மூலமும் பிரதிவிம்பவாதத்தினூடாகவும் ஆபாசவாதத்தினூடாகவும் நிறுவமுற்படுகிறது.

இந்த அடிப்படையில் தென்னிந்திய மக்கள் நாடு, மொழி, வர்ணாசிரம அமைப்புக்கள் ஆகியவற்றைக் கடந்து இந்து என்கிற ஏகத்துவ உணர்வுடன் ஒன்றிணைவதற்கான தத்துவார்த்தரீதியான தூண்டலை அத்வைதம் தன்னகத்தே கொண்டிருப்பதன் காரணத்தால் விஜயநகர ஆட்சியாளர்களாலும் இந்துப்புத்திஜீவிகளாலும் ஆகர்ஷிக்கப்பட்ட ஒரு மெய்யியற்கொள்கையாக அக்காலகட்டத்தில் அத்வைதம் முன்னிலைப்படுத்தப்பட்டது.

**அத்வைதச் சிந்தனைப்பள்ளியின் புத்தெழுச்சி:**

ஏகான்மவாதம், ஒருமைவாதம், மாயாவாதம் முதலிய பெயர்களால் சுட்டப்படுகின்ற அத்வைத வேதாந்தம் ஏகத்துவக் கொள்கையைச் சாதிப்பதாகும்.

> "பிரம்மத்தின் இருமையற்றநிலை, உலகத்தின் உண்மையற்ற நிலை பிரம்மத்திலிருந்து ஆன்மா வேறுபடாத நிலை"என்பதே அத்வைதத்தின் சாரமாகும்" இதனைக் கோட்பாடாக முறைமைப்படுத்தி நிறுவியவர் ஆதிசங்கரர் (கி.பி. 788-820) ஆவார்.
>
> மகாதேவன்,T.M.P.,2001, இந்துசமயதத்துவம்,ப.114.

ஆதிசங்கரரிற்குப் பின்னர் அவருடைய புகழ்பெற்ற சீடர்களான பத்மபாதர், சுரேஸ்வரர் ஆகியோரும் வாசஸ்பதிமிஸ்ராவும் அத்வைதச்சிந்தனைப் பள்ளியைத் தொடர்ந்தும் முன்னெடுத்தனர். பத்மபாதரின் பஞ்சபாதிகை என்ற பனுவலை அடியொற்றி விவரணச் சிந்தனைப்பள்ளி என ஒருகிளையும் வாசஸ்பதிமிஸ்ராவின் பாமதி என்ற பனுவலைப் பின்பற்றி பாமதிச் சிந்தனைப் பள்ளி என ஒரு கிளையுமாக மத்தியகாலத்தில் அத்வைதம் கிளைவிரித்தது.

தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டினைப் பொறுத்தவரையில் விவரணச் சிந்தனைப் பள்ளியின் செல்வாக்கே பெரிதும் நிலைபெறலாயிற்று இதற்குப்பிரதான காரணகர்த்தாவாக விளங்கியவர் கி.பி. 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வித்தியாரண்யர் என்ற ஞானியாவார்.

தமிழ்நாட்டில் அத்வைதம் கி.பி. 14ஆம் நூற்றாண்டில் புத்தெழுச்சி பெறுவதில் முக்கியபங்கு வகித்தோர் இருவராவர்,

1.வித்தியாரண்யர் 2.மாதவாச்சாரியார்

இவர்கள் இருவரும் விஜயநகரசாம்ராஜ்ஜியத்தின் அரசாங்கத்தில் மிகுந்த செல்வாக்குடையவர்களாகத் திகழ்ந்தனர்.

**வித்தியாரண்யர்:**

விஜயநகரசாம்ராஜ்ஜியம் நிறுவப்படுவதில் இவருடைய வகிபங்கு முதன்மையானதாகும். இவரே ஹரிகணன், புக்கன் சகோதரர்களின் அந்தரங்க ஆலோசகராகவும் ஞானாசிரியராகவும் விளங்கினார். ஆதிசங்கரரால் அத்வைதக் கொள்கையை பரப்புதற்காக மைசூரில் நிறுவப்பட்ட சிருங்கேரிமடத்தின் சமகாலத் தலைவராகவும் இவர் கடமையாற்றியமை கவனிக்கப்படவேண்டியதாகும். இந்த வகையில் விவரணப்பிரமேய சங்கிரகம், பஞ்சதசி, திருக்குதிரிசிய விவேகம், அனுபூதிப்பிரகாசிகா முதலிய அத்வைதப் பனுவல்களையும் வித்தியாரண்யர் இயற்றியுள்ளார்.

**மாதவாச்சாரியார்:**

இவர் விஜயநகரப் பேரரசனாகிய புக்கனுடைய குலகுருவும் அமைச்சருமாகிய சாயனாச்சாரியாரின் சகோதரர் ஆவார். சாயனாச்சாரியாரும் அத்வைதியேயாயினும் அவர் மெய்யியல்சார்ந்த பனுவல்கள் எதனையும் இயற்றவில்லை. ஆனால் மாதவாச்சாரியாரோ சர்வதரிசன சங்கிரகம், சீவன் முக்தவிவேகம் ஆகிய புகழ்பெற்ற அத்வைத பனுவல்களை இயற்றியுள்ளார். இவற்றுள் சர்வதரிசனசங்கிரகம் மிகுந்த கீர்த்தியுடையது. இந்நூல் பௌத்தம் முதற்கொண்டு அத்வைதம் வரையிலான பதினாறு தத்துவக்கொள்கைகளை எடுத்துரைத்து அவற்றுள் அத்வைதம் நீங்கலான பிறகோட்பாடுகளைத் தர்க்கரீதியாக நிராகரித்துள்ளது.

இராச்சியபேதம், மொழிபேதம், மாநிலபேதம், இனபேதம், வர்ணாசிரமபேதம் முதலியவைகளைக் கடந்து இந்து என்கிற ஏகத்துவ உணர்வுடன் தமது ஆட்சிக்குட்பட்ட தென்னிந்திய மக்கள் அனைவரையும் இஸ்லாமியருக்கெதிராக ஒன்று திரட்ட வேண்டிய அவசியம் விஜயநகர ஆட்சியாளர்களுக்கு இருந்தது. இதற்கான மெய்யியல் சார்ந்த எத்தனத்தை அத்வைதவேதாந்தத்தின் ஏகான்மவாதம் வழங்கியது அத்வைதம் மட்டுமன்றி விஜயநகரப்பேரரசு காலத்தில் எழுச்சி பெற்ற

வீரசைவம், சிவாத்துவிதம் ஆகியவற்றிலும் இதே நிலைப்பட்ட செல்நெறியை எம்மால் அவதானிக்கமுடியும்.

**தமிழ்மொழியில் அத்வைதப் பனுவல்களின் தோற்றம்:**

விஜயநகரப் பெருமன்னர் காலத்தில் வித்துவபூர்வ மொழியாகக் கருதப்பட்ட சமஸ்கிரதத்திலிருந்த அத்வைதக் கருத்துக்கள் தமிழ்மொழி மூலமும் பரவலடையத் தொடங்கின. கி.பி 14 ஆம் நூற்றாண்டின் கடைக்கூறுகளில் வாழ்ந்தவரான தத்துவராயரும் கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவரான தாண்டவராயரும் தமிழில் அத்வைதப்பனுவல்களின் எழுச்சிக்கு முன்னோடிகளாவர்.

**தத்துவராயரின் முதன்மை:**

அடங்கன்முறை, பாடுதுறை, தத்துவாமிர்தம், ஈஸ்வரகீதை, பிரம்மகீதை, சிவப்பிரகாசவெண்பா ஆகிய அத்வைப் பனுவல்களின் ஆசிரியராக இவர் விளங்குகிறார். அடங்கன்முறையில் அஞ்ஞைவதைப்பரணி மோகவதைப்பரணி உள்ளிட்ட பதினெட்டுச் சிற்றிலக்கியங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் முற்குறிப்பிட்ட பரணிகள் இரண்டும் சிறப்பிற்குரியன.சீவனும், சிவனும் ஒன்றே என்பதனை உணர்வதற்குத் தடையாக உள்ள அஞ்ஞானத்தையும் மோகத்தையும் வதஞ்செய்வதைப் பொருண்மையாகக் கொண்டே இவை . வேதாந்தப் பரணிகளேயாகும்.(கந்தசாமி,சோ.ந.,2003, **இந்திய தத்துவக்களஞ்சியம் தொகுதி**-2,ப.237.)

இவருடைய பாடுதுறை என்ற பனுவல் 138 தலைப்புக்களில் 1140 பாடல்களைக் கொண்டது. சமூக அடுக்கமைவுகளை அத்வைதமெய்யியல் என்னும் ஆயுதத்தைப் பிரயோகித்து தகர்க்கமுறபடுகின்ற பண்பினை இதன் பலஇடங்களில் அவதானிக்கமுடிகின்றது.

எடுத்துக்காட்டாகக் "குறத்தி" ஒருத்தி வேதங்களில் போற்றப்படுகின்ற பரப்பிரம்மமும் தானும் ஒன்றே என அத்வைதம் பேசுகின்ற பாடல் குறிப்பிடத்தக்கது.

(கிருஸ்ணவேணி,என், "அத்வைதமரபிற்தத்துவராயர்",**விஜயநகரப்பேரரசு ஆய்வரங்கு மலர்**2010)

**"பாடும் மறையிற் பரப்பிரம்மமும் நானும்**
**கூடும் வகை தேடிக் குனித்திடும் குறத்தியளே"**

திருஉந்தியாரின் அமைப்பில் உள்ள பிறிதொரு பாடல் தவத்திலே பெற்ற ஞானத்தினால் பிறப்பால் தொடரும் சாதிவேற்றுமைகளைக் கழிந்து பரப்பிரம்மம் ஆகியதை உரைப்பதாகவுள்ளது

**"முன்செய்த தவத்திலே முயன்ற அப்பெருமையால்**
**பின்சாதி கழிந்தோமென்று உந்தீபற பிரமமேயானோம் என்றுந்தீ பற"**

பாடுதுறையில் அமைந்த பிறிதொரு பாடலில் "தீட்டு தள்ளிப்போ" என அதட்டுகின்ற பிராமணனை நோக்கி பறைச்சி ஒருத்தி எழுப்புகின்ற வினா அத்வைதத்தொனிப்புடன் உயிர்கள் அனைத்தும் பிரம்மமே என்பதனை அறிவுறுத்துவதாக அமையப்பெற்றுள்ளது. ஆதிசங்கரரின் வாழ்க்கை வரலாற்றில் நடைபெற்றதாகக் கூறப்படுகின்ற ஒரு சம்பவத்தினை இவ்வினா நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளமையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது.

அத்வைதம் கூறுகின்ற பிரம்மத்தினைச் சிவனாகப் பார்க்கின்ற ஒரு போக்கு தமிழ்மரபில் உதயமாவதற்கு தத்துவராயரே காரணகர்த்தாவாகத் திகழ்ந்துள்ளார்.

**தாண்டவராயரின் சிறப்பு:**

தத்துவராயரைத் தொடர்ந்து வந்த தாண்டவராயர் கைவல்யநவநீதம் எனும் புகழ்பெற்ற அத்வைதப் பனுவலை இயற்றினார்.

**"குடவானும் பெரியவானும் கூடி ஒன்றாம் எப்போதும்..."** (கைவல்யநவநீதம்,பாடல்.82)

**கடமென்னும் உபாதிபோனால் ககனம் ஒன்றானர் போல**
**உடலெனும் உபாதிபோன உத்தரம் சீவன்முக்தர்"**(கைவல்யநவநீதம்,பாடல்.106)

என அத்வைதத்தின் அவச்சேதவாதத்தினூடாக ஏகான்மவாதம் பேசிய தாண்டவராயர்

**"அறிபடும் பொருள் நீ இல்லை அறிபடாப் பொருள் நீ அல்லை**
**அறிபொருள் ஆகும் உன்னை அனுபவித்து அறிவாய் நீயே"**

(கைவல்யநவநீதம்,பாடல்.74)

எனப் பரபக்கம் மறுத்து பிரம்மஜீவ ஏகத்துவத்தைச் சாதிக்க முயல்கிறார்.

**கந்தபுராணத்தில் அத்வைத எதிர்ப்புணர்வு:**

கந்தபுராணம் அடிப்படையில் ஒரு சைவசித்தாந்தச் சார்புடைய பேரிலக்கியம் என்பதனை யாவரும் ஏற்பர். தனது காப்பியத்தின் கதையோட்டத்தில் சைவசித்தாந்த கருத்தமைவுகளை காசிபருதேசப்படலத்தில் திட்டமிட்டு அமைத்திருந்த கச்சியப்பசிவாசாரியார் சைவசித்தாந்தத்துக்குப் பரபக்கமாக அமையும் மெய்யியற் கொள்கைகளையும் தனது நூலில் திட்டமிட்டு மறுதலிக்கத் தவறவில்லை.

கந்தபுராணத்தில் அமைந்துள்ள இந்திரபுரிப்படலம், சுக்கிரன் உபதேசப்படலம், ததீசியுத்தரப்படலம், திருக்குற்றாலப்படலம், சூரன் அமைச்சியற்படலம் ஆகியவற்றில் இதனைத் தெளிவாக அவதானிக்க முடிகிறது.

எவ்வாறாயினும் சைவசித்தாந்தத்தின் பிரதான எதிரியாகக் கச்சியப்பரால் கருதப்பட்டது அக்காலத்தில் சிவத்தைப் பிரம்மமாக ஏற்றுக்கொண்டு ஒவ்வோர் ஆன்மாவும் சிவமேயன்றி வேறில்லை என ஏகான்மவாதம் பேசிய அத்வைதமும் அது சார்ந்த ஸ்மார்த்த சைவமுமேயாகும்.

கச்சியப்பசிவாசாரியார் தனது கந்தபுராணத்தினைப் பாடியதற்கான நோக்கங்களில் ஒன்று மாறாகப் த்வைதத்தின் ஏகான்மவாதமும் அதன் பயில் நிலையும் சமூகத்தில் நன்மையைத் தோற்றுவிக்காது, பெருநாசத்தையே விளைவிக்கும் என்பதனை வலியுறுத்துவதற்கேயாகும்.

"சூரபத்மனை வேதாந்தப் பள்ளியில் பயிலும் நன்மாணாக்கனாகவும்
அக்கொள்கையினைத் தனது வாழ்க்கையில் அழுந்தப் பின்பற்றுவோனாகவும்
படைத்துக்காட்டி இறுதியில் உறுதிபெற இக்கொள்கை அவனுக்குத்
துணை புரியவில்லை என்பதையும் கதைப்போக்கால் உணர்த்திச் சைவசித்தாந்த
நெறியே பிறநெறிகளிலும் விழுப்பமானது என்பதனைக் கச்சியப்பர் வலியுறுத்துவார்."

எனக் **"கந்தபுராண ஆராய்ச்சி"** என்ற நூலிற்கு வழங்கிய அணிந்துரையில் சித்தாந்தப் பேராசிரியரான முனைவர் வை. இரத்தினசபாபதி அவர்கள் குறிப்பிடுவதும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

கந்தபுராணத்தின் அசுரகாண்டத்தில் இடம்பெற்றுள்ள சுக்கிரனுபதேசப்படலமும், மகேந்திரகாண்டத்தில் அமையப்பெற்றுள்ள சூரன் அமைச்சியற் படலமும் அத்வைதவேதாந்தக் கருத்துக்களை அதிகளவில் கொண்டுள்ள பகுதிகளாகும்.

கந்தபுராணத்தில் சூரபத்மனின் ஆளுமையானது மாணவ நிலையில் அறிவு, திறன், அடிப்படையில் சுக்கிராச்சாரியாரால் கட்டியெழுப்பப்படுவதை விபரிக்கும் வகையில் சுக்கிரன் உபதேசப்படலம் அமைந்துள்ளது. அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியர் சூரபத்மனின் தாயாகிய மாயையின் வேண்டுகோளின் பிரகாரம் அசுரஞானமாகிய அத்வைதத்தைப் போதிப்பதே இப்படலத்தின் சாரமாகும்.

"தீது சால்மனத் தேசிகன்" என்ற விருதுப் பெயருடன் சுக்கிரரை அறிமுகஞ்செய்கின்ற கச்சியப்பர் தொடர்ந்து வருகின்ற இருபத்திரண்டு பாடல்களில் அத்வைதவேதாந்தத்தின் அடிப்படைகளை விளக்கியுள்ளார்.இவ்விருபத்திரண்டு பாடல்களும் தூயமெய்யியல் நிலையில்

அத்வைதத்தினைப் போதிப்பனவாகும். அதைத் தொடர்ந்து வருகின்ற ஐந்து பாடல்கள் உபதேசிக்கப்பட்ட அத்வைத அறிவை அசுரகுலத்திற்கேற்ற வகையில் திறன் விருத்திக்குப் பிரயோகித்தலுடன் தொடப்புடையவையாக அமையப்பெற்றுள்ளன.
எடுத்த எடுப்பிலேயே

**"பாசமென்றும் பசுவென்றும் மேதகும்**
**ஈசனென்றும் இசைப்பர் தனையெனப்**
**பேசல் மித்தை......"** (கந்.புராணம் 2:10:24)

எனக் காசிபர் மொழிந்த முப்பொருளுண்மையை சுக்கிராச்சாரியார் நிராகரிப்பதுடன் தனது அத்வைத உபதேசத்தினை ஆரம்பிக்கின்றார்.

**"..பிறிதலை ஆவியும்**
**தேசுமேவு சிவனும் ஒன்றாகுமே"**(கந்.புராணம் 2:10:24)

என அப்பாடலின் இறுதி இரண்டு அடிகளிலும் சீவனும் சிவனும் அடிப்படையில் வேறானவை அன்று என்கிற அத்வைதத்தின் ஏகான்மவாதத்தினை வெளிப்படுத்திவிடுகிறார். ஏகான்மவாதத்தினை சாதிப்பதற்காக வாசஸ்பதிமிஸ்ராவால் முன்வைக்கப்பட்ட அவச்சேதவாதம் அத்வைத மரபில் பிரபல்யமுடையதாகும்.

இதனை மகாகாயம் (ஆகாயவெளி) கடாகாயம் (குடத்திலுள்ள வெளி) ஆகிய எடுத்துக்காட்டுகளால் விளக்குவது அத்வைத மரபாகும். விஜயநகர மன்னர் காலத்தில் எழுச்சிபெற்ற புகழ்பெற்ற அத்வைதப் பனுவல்கள் யாவற்றிலும் இவை எடுத்துக்காட்டப்பட்டிருந்தமை தொடர்பாக இக்கட்டுரையில் முன்னதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவச்சேதவாதத்தினை அதேவிதமான எடுத்துக்காட்டுக்களுடன் சுக்கிரனுபதேசப் படலத்தில் வைத்துக் கச்சியப்பரும் பதிவு செய்துள்ளார்.

**"கடங்கொள் வானிற் கலந்துமற் றவ்வுடல்**
**மடங்கு மெல்லையின் மன்னுவன் தொன்மைபோல்"**(கந்.புராணம் 2:10:30)

**"எண்ணிலாத கடந்தொறும் மேவுகின்றதோர்**
**விண்ணினுக்காகுமோ"** (கந்.புராணம் 2:10:36)

**தருமம், கருமம் பற்றிய விளக்கங்கள்:**

சுக்கிராச்சாரியார் தருமம் பற்றியும், கன்மக்கொள்கை பற்றியும் சூரனுக்கு உபதேசிக்கும் இடங்கள் அத்வைதத்திற்குப் பொருத்தமற்ற தவறான விளக்கங்கள் என்றும் அறம், பாவம் என்ற இருமைகளை சுக்கிராச்சாரியார் தேவர்களைப் பழிவாங்கவேண்டுமென்ற உள்நோக்கத்துடன் அத்வைதத்திற்குப் பொருந்தாதவாறு மாறுபடக் கூறியுள்ளார் என்றும் சில ஆய்வாளர்கள் கருதியுள்ளனர்.

> "ஏகான்மைவாதம் பற்றிய தவறான ஒரு விளக்கத்தையும் சுக்கிரனுபதேசம் தந்துள்ளது என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. அவ்விளக்கம் தருமம், பாவம் என்பன தொடர்பானது. ஏகான்மவாதம் பேசுவோர் தருமம், பாவம் என்பவற்றை வேறுபடுத்தி நோக்கமாட்டார்கள் என்பது சுக்கிரரின் போதனைகளில் பெறப்படுகின்றது. இது ஏகான்மவாதத்தினைச் சரிவரப் புரிந்துகொள்ளாத அல்லது தவறாகப் புரிந்துகொண்ட நிலையாகும்."

(சுப்பிரமணியன்,நா.,2002,**கந்தபுராணம் ஒரு சமயபண்பாட்டுக் களஞ்சியம்**,பக்.80-81)
ஆனால் இவ்விளக்கம் பொருத்தமற்றதாகவே தோன்றுகின்றது.

**"தருமம் செய்க தவறுள பாவமாங்**
**கருமஞ் செய்யற்க என்பர் கருத்திலார்**
**இருமை தன்னையும் யாவர் செய்தாலு மேல்**
**வருவ தொன்றிலை மாயம் வித்தாகுமோ"** (கந்.புராணம் 2:10:40)

**"இம்மையாற்றும் இருவினையின் பயன்**
**அம்மை எய்தின் அன்றே அறுவையப்படும்**
**பொய்மையே யது பொய்யில் பிறப்பது**
**மெய்ம்மையாகு மதோ................"**(கந்.புராணம் 2:10:42)

ஆகிய இரண்டு பாடல்களை அடிப்படையாக வைத்தே இத்தகையதோர் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இத்தகைய கருத்துக்கள் அத்வைதத்தின் கனவுலக வாதத்தினை அடிப்படையாகக் கொண்டே மேற்கிளம்பியவையாகும்.

அத்வைதமானது உலகின் இருப்பையும் நிகழ்ச்சிகளையும் அனுபநிலையில் ஏற்றுக்கொண்டபோதிலும் இயற்றிநிலையில் நிராகரிக்கின்றது. இதற்காகவே கனவுலக வாதம் முன்மொழியப்படுகின்றது. நனவு நிலையின்போது கனவு நிலையில் தெரிந்த, அனுபவித்த அனைத்தும் பொய்யாவது போல பரமார்த்திக நிலையில் நனவு நிலையும் அதன் நிகழ்சிகளும் செயல்களும் பொய்யென்பது புலப்படும். இதுவே கனவுலகவாதம் பற்றிய மிக எளிமையான விளக்கமாகும்.

தருமம், கருமவினை தொடர்பாக முன்னர் எடுத்தாளப்பட்டுள்ள பாடல்களுக்கான கருத்து விளக்கத்தை கனவுலவாதத்தின் தளத்திலிருந்தே சுக்கிராச்சாரியார் விளக்குவதாக கச்சியப்பர் அமைத்துள்ளார். இதற்கு ஆதாரமாக மேற்குறிப்பிட்ட பாடல்கள் இரண்டிற்கும் மத்தியில் அமைந்துள்ள பின்வரும் பாடலினைச் சுட்டிக்காட்டல் பொருத்தமுடையதாகும்.

**"கனவின் எல்லையில் காமுறு நீரவும்**
**இனைய வந்தவும் ஏனை இயற்கையும்**
**நனவு வந்துழி நாம் கண்டதில்லையால்**
**அனையவாம் இவன் ஆற்றுஞ் செயலெலாம்"** (கந்.புராணம் 2:10:41)

இதில் தர்மம்,பாவம் முதலிய செயல்களைக் கனவுலகவாதத்தின் தளத்திலிருந்தே சுக்கிராச்சாரியார் நிராகரிப்பது கவனிக்கத்தக்கது. மேலும் மனுமுதலியோர் விதித்தன செய்தலையும் விலக்கியன ஒழித்தலையும் அறம் எனக் கருதுகின்ற நிலைப்பாட்டை விஜயநகரப்பெருமன்னர் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த அத்வைதம், வீரசைவம் உள்ளிட்ட தத்துவ நெறிகளைச் சார்ந்தோர் ஏற்றுக்கொள்ள மறுத்தலையும் இதற்குப் பிறிதோர் காரணமாய் குறிப்பிடமுடியும். மேலும் சமூக அடுக்கமைவுகளுக்கான நியாயப்பாடாகக் கன்மக்கொள்கையை முன்வைக்கின்ற மெய்யியல் யுக்தி சோழப்பெருமன்னர் காலத்தைப் போலன்றி விஜயநகரக் காலப்பகுதியில் கேள்விக்குள்ளாக்கப்பட்ட காரணத்தினாலும் கச்சியப்பர் சுக்கிராச்சாரியார் ஊடாக இதனை வெளிப்படுத்திருக்க வாய்ப்புள்ளது.

தன்னைப் பிரமம்மாக உணர்கின்றவன், அனைத்து ஜீவராசிகளும் தானும் -பிரம்மமும் வேறல்ல என்கின்ற அத்வைதஞானம் வாய்க்கப்பெறுகின்றவன் ஈடேற்றமடைகிறான். பிரம்மமாகவே ஆகிவிடுகிறான். எனவே பூதவிகாரங்களால் தோன்றுகின்ற சிறுமை, பெருமைகள் யாவும் அறியாமையால் விளைபவை.

இதுவே அத்வைதத்தின் சமூகப் பயில்நிலைக்கான பிரதான சூட்சுமவித்தையாகும். சுக்கிரனுபதேசப்படலத்தில் அத்வைதக்கோட்பாட்டின் விளக்கம் நிறைவுறுகின்ற இறுதிப்பாடலாக

அமையும் பின்வரும் பாடலில் இதனைச் சுக்கராச்சாரியார் கூற்றாக வெளிப்படுத்தியிருப்பது சைவசித்தாந்தியாகிய கச்சியப்பரின் ஆழ்ந்த வேதாந்தப் புலமையினையும் அவரது கவிதா நேர்மையையும் புலப்படுத்துவதாயுள்ளது.

**"சிறியரென்றும் சிலரை, சிலரை மேல்**
**நெறியரென்றும் நினைவது நீர்மையோ**
**இறுதியில் உயிர் யாவும் ஒன்றேயென**
**அறிதல் வேண்டும் அஃதுண்மையதாகுமே"** (கந்.புராணம் 2:10:44)

இதுவரையிலும் அத்வைத "அறிவை" மட்டுமே புகட்டிய சுக்கிராச்சாரியார் அசுரர்குல நன்மைக்காகச் சூரன் தான்கற்ற அறிவினைத் திறன்விருத்தியாக ஆக்கிக்கொள்ளவதற்கென அவனைத் தயார் செய்யும் நோக்குடன் போதனையின் போக்கைச் சற்றே மாற்றியமைக்க முற்படுகிறார்.

**"இனி நுங்களுக்காகிய**
**வண்மையும் தொல் வழக்கமும் மற்றவுந்**
**திண்மையோடுரை செய்திடக்கேட்டி நீ"** (கந்.புராணம் 2:10:45)

இதனை அடையாளங்காட்டுகின்ற உத்திமுறையாக கச்சியப்பர் இப்பாடலைத் தொடர்ந்து செய்யுள்யாப்பை "வேறாக" மாற்றுவதும் கவனத்திற்குரியது.உன்னை நீ பிரம்மம் என்று உணர்ந்த பின்பு நான்முகனும் திருமாலும் இந்திரனும் உனக்கு யார்? என்று தொடங்கிச் சிறுகச் சிறுக அசுரர்குலத்தின் தேவைக்கான கருவியாக அத்வைதவயப்பட்ட சிறுவனாகிய சூரன் அறிவுச்சலவை செய்யப்படுகிறான். எனவே ஏகான்மவாதம் பக்குவமற்றோர்க்குத் தவறான உள்நோக்கத்துடன் போதிக்கபடுமாயின் சமூக நாசத்தை ஏற்படுத்தவல்லதாகிவிடும் என்கிற கருத்தையே கச்சியப்பர் சூசகமாகப் புலப்படுத்த விழைகிறார்.

இவ்வாறாகச் சுக்கிரனுபதேசத்தால் அத்வைதவழியில் அறிவுப் போதனையும் திறன் விருத்தியும் செய்யப்பட்ட சூரனின் மனப்பாங்கின் உருவாக்கத்திலும் அத்வைதம் பாரியளவு செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இதனை மகேந்திர காண்டத்தில் அமைந்துள்ள "சூரன் அமைச்சியற்படலத்திலிருந்து" தெளிவாக அறியமுடிகிறது.முருகனும் சிவனும் வேறல்ல என்று தொடங்கி சிங்கமுருகனின் சைவசித்தாந்தச் சார்புடைய ஆழமான கருத்துரைகளிற்கான மறுப்புரைக்காகச் சூரன் அத்வைதத்தின் ஏகான்மவாதத்தையே துணைக்கழைக்கிறான்.தானே பரப்பிரம்மம் என்ற நிலைப்பாட்டைச் சாதிப்பதற்காக இப்படலத்தில் அத்வைதகளின் பிரதிவிம்பவாதமும் அவச்சேதவாதமும் பொருத்தமான அத்வைத மரபுசார்ந்த எடுத்துக்காட்டுக்களுடன் சூரனால் எடுத்தியம்பப்பட்டுள்ளன. (கந்.புராணம்.3:21:145-146)

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தது போல அத்வைதிகளின் சத்காரண வாதமும் சூரனால் பிரயோகிக்கப்படுகிறது.காரியம் என்பது காரணத்தின் திரிந்தவடிவமேயன்றித் தனித்த பரிணாமப் பொருள் அல்ல என்பதனை வலியுறுத்துவதே சத்காரணவாதமாகும். இது சைவசித்தாந்தம், சாங்கியம், விசிட்டாத்வைதம் ஆகியவை குறிப்பிடுகின்ற பரிணாமவாதங்களுக்கு முரணானதாகும்.அத்வைத மரபில் இது "பொன் - ஆபரணம்" என்ற எடுத்துக்காட்டின் வழியே விளக்கப்படும்.இதனையே சூரனும் எடுத்தாள்கிறான்.

**"பிரமேயிவர் அல்லர் இவரெனப் பேதித்து**
**இருமையாகவே கொள்ளலை யாக்கையே வேறு**
**பரமமாகிய உயிரெலாம் ஒன்று பல்பணியும்**
**பொருளதாகிய ஒருமையாய் முடிந்தவா போல**

(கந்.புராணம் 3:21:147)